07

# இரண்டாம் பருவ மதிப்பீடு 2017-18
## மேனிலை இரண்டாம் ஆண்டு
## தமிழ்
# Second Term Evaluation 2017-18
## Higher Secondary Second Year
## (Part II - Tamil)

வகுப்பு : HSE II

நேரம் : $2\frac{1}{2}$ மணி

மதிப்பெண் : 80

குறிப்பு :

- தேர்வுக்கு முன்புள்ள 15 நிமிடம் சிந்தனை நேரமாகும்.
- வழிமுறைகளை நன்கு வாசித்துத் தேவையான வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

***(1 முதல் 4 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக)***

(4 × 1 = 4)

1. “மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு” எனும் தொடரில் யாக்கை என்பதன் பொருள்

அ) நோய் ஆ) உணவு

இ) உடல் ஈ) உயிர்

2. கான்சாகிபு கதைப்பாடலில் எந்த நகரின் அழகு வர்ணிக்கப்படுகிறது?

அ) மதுரை ஆ) சென்னை

இ) பூம்புகார் ஈ) திருச்சி

3. “காற்றுள்ள போதே தூற்றிக்கொள்’ என்பது எதனுடன் தொடர்பான பழமொழி.

அ) கல்வி ஆ) வேளாண்மை

இ) வணிகம் ஈ) நெசவு

4. உயிரினப்பாகுப்பாடுகளைக் குறித்து விவரிக்கும் இலக்கண நூல்

அ) மணிமேகலை ஆ) திருவாசகம்

இ) நன்னூல் ஈ) தொல்காப்பியம்

***(5 முதல் 10 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை தருக.)*** (6 × 3 = 18)

5. ‘ஹோலோகிராம்’ பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.
6. ‘நடைப்பயிற்சி நல்ல உடற்பயிற்சி’ என்பதைக் குறித்து உங்கள் கருத்தை வெளிப்படுத்துக.
7. சிறுமை + பொருள், முதுமை + ஊர்
   என்னும் சொற்கள் புணரும்போது ஏற்படும் மாற்றங்களை விளக்குக.
8. பிறமொழி அறிவியல் நூல்களைத் தமிழாக்கம் செய்வதால் ஏற்படும் பயன்களைக் குறிப்பிடுக.
9. நெடுநல்வாடை காட்டும் மழைக்கால காட்சியை எழுதுக.
10. ‘அறுசுவைகள்’ என்னும் தலைப்பில் பள்ளி ஆண்டு மலரில் வெளியிட செய்தித்துணுக்குகள் தயார் செய்க.

***(11 முதல் 16 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை தருக)*** (6 × 4 = 24)

11. ‘நம்ம நிலம்’ கவிதையில் கவிஞர் சுயம்புலிங்கம் முன்வைக்கும் கருத்துகளை ‘பொங்கலோ பொங்கல்’ கவிதையில் கவிஞர் பழனிபாரதி கூறும் கருத்துக்களுடன் ஒப்பிடுக.

12. கீழ்வரும் கணினிக்கலைச் சொற்களுக்கான தமிழ்ச்சொல்லை எழுதுக.

Cursor, Device, Graphics, Disk Drive

13. ஓடி, ஆடி விளையாடும் விளையாட்டுகள் குறைந்து அறைக்குள் அமர்ந்தே ஆடும் விளையாட்டுகள் அதிகரிப்பதால் இளைஞர்களிடம் ஏற்பட்டுள்ள உடல், மனம் சார்ந்த பிரச்சினைகளை விளக்குக.

14. "ஆற்று வெள்ளம் நாளைவரத்
தேற்றுதே குறி
மலையாள மின்னல் ஈழமின்னல்
சூழமின்னுதே...
நேற்று மின்றும் கொம்பு சுற்றிக்
காற்றடிக் குதே - கேணி
நீர்ப்படு சொறித் தவளை
கூப்பிடுகுதே"

இப்பாடல் வரிகளை நயம்பாராட்டி விளக்குக.

15. 'அறிவியல் வளர்ச்சி ஆக்கத்திற்கே/அழிவிற்கே' எனும் தலைப்பில் பட்டிமன்றத்தில் பேசிட ஏதேனும் ஓர் அணிக்கான குறிப்புகளைத் தயார்செய்க.

16. துரித உணவும், உணவுப்பொருட்கள் குறித்த விளம்பரங்களும் உடல்நலத்திற்கு ஏற்படுத்தும் விளைவுகளைத் தலையங்கமாக எழுதுக.

***(17 முதல் 21 வரையுள்ள வினாக்களில் ஏதேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.)***

(3 × 6 = 18)

17. 'திருக்குறளில் உழவு' என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடத்திட கட்டுரை தயார்செய்க.

18 'ஆரோக்கியமான உடம்பிலே ஆரோக்கியமான மனமிருக்கும்' இக்கருத்தினை வலியுறுத்தும் பத்திரிகைப் பெட்டிச்செய்தி தயார்செய்க.

19. 'இலக்கியமும் அறிவியலும்' எனும் தலைப்பில் கலைவிழாவில் பேச சொற்பொழிவு உரை தயார் செய்க.

20. யோகாசனத்தின் நன்மைகளை அறிய விரும்பும் உன் நண்பனுக்கு அவற்றை விளக்கி ஒரு கடிதம் எழுதவும்.

21. மொழிபெயர்ப்புகள் மொழிவளர்ச்சிக்கு உதவும் என்ற கருத்தினை வெளிப்படுத்தும் கட்டுரை எழுதுக.

***(22 முதல் 24 வரையுள்ள வினாக்களில் ஏதேனும் இரண்டனுக்கு விடை தருக.)***

(2 × 8 = 16)

22. நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் கூறுகள் குறித்துத் திறனாய்வுக் கட்டுரை எழுதுக.

(தெய்வ நம்பிக்கை - கூடிவாழும் பண்பு - பண்பாடுகள் - இயல்பான சிந்தனை)

23. 'வலைக்குள் வலை' என்னும் சிறுகதை தொழில்நுட்பத்தின் மோசமான விளைவையும், 'வித்வான் கதை' அறிவியல் வளர்ச்சியின் சிறப்பையும் சுட்டுகின்றன. கதைக்கருவை, சூழலை விமர்சனப் பார்வையுடன் ஒப்பிடுக.

24. இளம் வயதிலே போதைப்பொருட்களைப் பயன்படுத்தித் தன்னை அழித்து சமூகத்திற்கு தீங்கு ஏற்படுத்தும் இளைஞர்கள் விழிப்புணர்வு பெறும் வண்ணம் அறிவிப்பு ஒன்றை தயார்செய்க.

(உடல் நலக் குறைவு - மனநிலை பாதிப்பு - பெற்றோர் மனநிலை - சமூக விரோதச் செயல்கள் - அகால மரணம்)

Set: 1

# இரண்டாம் பருவ மதிப்பீடு 2017-2018
# மேனிலை இரண்டாம் ஆண்டு
# தமிழ்
# மதிப்பீட்டுக் குறிப்புகள்

**Higher Secondary Second Year**

**HSE: II** **Scoring Key**

| வரிசை எண் | மதிப்பீட்டுக் குறிப்புகள் | மதிப்பெண் விளக்கம் | மொத்தம் மதிப்பெண் |
|---|---|---|---|
| 1. | உடல் | 1 | 1 |
| 2. | மதுரை | 1 | 1 |
| 3. | வேளாண்மை | 1 | 1 |
| 4. | தொல்காப்பியம் | 1 | 1 |
| 5. | முப்பரிமாண உருவவரைவு<br>வெற்றிடவரைவு<br>உருவப் பதிவு செய்தல் | 1<br>1<br>1 | 3 |
| 6. | உடல் ஆரோக்கியம்<br>நோயின்றி வாழலாம்<br>உற்சாகம் | 1<br>1<br>1 | 3 |
| 7. | சிறுமை + பொருள் - சிறுபொருள் - மை கெட்டது<br>முதுமை + ஊர் - மூதூர் - மைகெட்டது<br>உகரம் - ஊகார மாகமாறியது (குற்றெழுத்து<br>நெட்டெழுத்தானது) | 1<br><br><br>2 | 3 |
| 8. | தமிழ்மொழி வளர்ச்சி<br>எளிதில் புரியும் தன்மை<br>பிறமொழிக் கருத்தினைப் புரிதல் | 1<br>1<br>1 | 3 |
| 9. | வருணனை<br>கோவலர் நிலை<br>ஆநிரைகள் நிலை | 1<br>1<br>1 | 3 |
| 10. | ஆறு சுவைகள் பயன்கள்<br>இனிப்பு - வளம்<br>துவர்ப்பு - ஆற்றல்<br>கசப்பு - மென்மை<br>கார்ப்பு - உணர்வு<br>உவர்ப்பு - தெளிவு<br>புளிப்பு - இனிமை | ½ × 6 | 3 |
| 11. | நிலத்தின் இன்றையநிலை<br>இயற்கைப் பாதுகாத்தலின் அவசியம் | 2<br>2 | 4 |
| 12. | எடு: Cursor - அடையாளச்சுட்டு<br>Device - சாதனம்<br>Graphics - வரைமுறைகள்<br>Disk Drive - தகடுசெலுத்தி | 1<br>1<br>1<br>1 | 4 |
| 13. | உடல் பருமன்<br>ஆரோக்கியம் குறைவு<br>முயற்சியின்மை<br>சிந்தனைத்திறன் கூடுதல் | 1<br>1<br>1<br>1 | 4 |

| வரிசை எண் | மதிப்பீட்டுக் குறிப்புகள் | மதிப்பெண் விளக்கம் | மொத்தம் மதிப்பெண் |
|---|---|---|---|
| 14. | எதுகை, மோனை | 1 | |
| | கருத்து | 2 | |
| | சொல் நயம், பொருள் நயம் | 1 | 4 |
| 15. | அறிவியல் வளர்ச்சியின் மேன்மை | 1 | |
| | இளைஞர் சமூகம் பாதிப்பு | 1 | |
| | உலக அறிவு பெறுதல் | 1 | |
| | அனைத்துத் துறைகளிலும் ஈடுபாடு | 1 | 4 |
| 16. | உடம் நலம் பாதிப்பு | 2 | |
| | வளர்ச்சி குறைவு | 1 | |
| | நேரமின்மை | 1 | 4 |
| 17. | திருக்குறள் குறிப்பு | 2 | |
| | உழவின் பெருமை | 2 | |
| | கருத்துத்தெளிவு | 2 | 6 |
| 18. | ஆரோக்கியமான வாழ்வு | 2 | |
| | நல்ல சத்துணவு | 2 | |
| | உடற்பயிற்சி | 2 | 6 |
| 19. | இலக்கியம் | 2 | |
| | அறிவியலின் தன்மை | 2 | |
| | உரைச்சிறப்பு | 2 | 6 |
| 20. | யோகாசனம் | 2 | |
| | செய்யும் முறைகள் | 2 | |
| | மொழிநடை/கருத்து | 2 | 6 |
| 21. | மொழிபெயர்ப்பு | 2 | |
| | கருத்து மாறாமை | 2 | |
| | சரியான மொழிநடை | 2 | 6 |
| 22. | நாட்டுப்புறக் கலைகள் | 2 | |
| | இன்றைய நிலை | 2 | |
| | கருத்து | 2 | |
| | மொழிநடை/வடிவம் | 2 | 8 |
| 23. | கதைக்கரு | 3 | |
| | ஒப்பிடுதல் | 2 | |
| | விமர்சனக் கண்ணோட்டம் | 2 | |
| | மொழிநடை | 1 | 8 |
| 24. | பொருத்தமான தலைப்பு | 3 | |
| | உடல்நலக் குறைவு | 2 | |
| | கருத்து | 2 | |
| | மொழிநடை | 1 | 8 |
| | **மொத்தம்** | 80(20 | 80(20) |